Registered as a News Paper in Sri Lanka · பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 18 (03 - 08 - 1991) சனிக்கிழமை ஓசை: 166

மருந்துத்தட்டுப்பாடு தொடர்ந்துநீடிக்கின்றது

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ் மாவட்டத்திற்கென ஒரு லொறி மருந்துப் பொருள்கள் கொண்டு வரப்பட்டபோதிலும்மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது இதனால் பிரதேச வைத்தியசாலைகளுக்கு அவசரமாகத் தேவைப்படுகிற மருந்து வகைகளை மட்டுமே வழங்கி வருவதாக யாழ். மாவட்ட சுகாதார திணைக்கள (4 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளின் தாக்குதல் திறன் குறித்து சிறிலங்கா இராணுவ தரப்பு அதிர்ச்சி

(கொழும்பு)

ஆனையிறவு முகாம் மீதும், தரையிறங்கிய இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ள சளைக்காத தாக்குதல்கள் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளன. மேலும புலிகளின் முற்றுகை முயற்சியை முனனே அறிந்து அதை முறியடிப்பதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்தும முற்றுகை மூன்று வாரங்களுக்கும மேலாக நீடிப்பது குறித்தும் அவை அதிர்ச்சியிலும், குழப்பத்திலும ஆழ்ந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் ஆனையிறவு முகாமைத் தாக்குவதற்குத் திட்டமிட்டுள்ளார்கள் என்பது சிறிலங்கா இராணுவத் தலைமைக்கு நான்கு மாதங்களுக்கு முன் தெரிந்த செய்தி என்று இராணுவத் தரப்பில் சொல்லப்படுகிறது கொழும்பில் போராளிக் குழுக்கள் இத்தகவலைத் தெரிவிப்பதற்கு முதல் இராணுவப் புலனாய்வுப் பிரிவு இது பற்றிய தகவலை வழங்கியுள்ளது. ஊர்ஜிதம் செய்யப்பட்டதான இத்தகவலையடுத்து இராணுவம் அதன் நிலையை ஆனையிறவு முகாமில் பலப்படுத்தியது என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனையிறவு முகாமில் இராணுவத்தின்எண்ணிக்கை 1000 ஆக அதிகரிக்கப்பட்டது. மற்றும் மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவு, மருந்து வகைகள், ஆயுத உபகரணங் (4ஆம் பக்கம் பார்க்க)

படையினரின் தகவல்கள் சரியெனச் சொல்லமுடியாது - வால்டர் பெர்னான்டோ

(கொழும்பு)

ஆனையிறவு மோதலில் படை வீரர் பலர் புலிகளைச் சுட்டுக் கொன்றதாக முறையிடுகின்றனர் இந்தப் புள்ளி விபரங்கள் நூற்றுக்கு நூறு சரியென்றுசொல்ல முடியாதுஎன பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளர் ஏயர்சீப்மார்சல் வால்டர் பெர்னான்டோ செய்தியாளர் மத்தியில் பேசு (4ஆம் பக்கம் பார்க்க)

விமானம் சேதம்; 24 படையினர் பலி

ஆனையிறவுப் பகுதியில் குண்டு வீச்சில் ஈடுபட்டிருந்த விமானங்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன் தினம் நடத்திய தாக்குதலில் குண்டுவீச்சு விமானம் ஒன்று சேதமானது. இவ் விமானம் உடன் தளத்திற்குத் திரும்பியது இதேவேளை நடைபெற்ற மோதல்களில் இருபத்திநான்கு இராணுவத்தினர் (4ஆம் பக்கம் பார்க்க)

ஆனையிறவில் மோதல்கள் நேற்று சற்றுத் தணிவு

(ஆனையிறவு)

ஆனையிறவு நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கு மிடையே நேற்று மோதல்கள் சற்றுத் தணிந்து காணப்பட்டதாகப் போர் முனையிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இருதரப்பினரும் தத்தமது நிலைகளைப் பலப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் ஆனையிறவுப்பகுதியில் இரு தரப்பாருக்குமிடை (4ஆம் பக்கம் பார்க்க)

ஆனையிறவு மோதல்கள் ஓயப்போவதில்லை

ஆனையிறவுச் சண்டை கடுமையாக நடந்துகொண்டிருக்கும் இவ்வேளையில், இதில் ஆனையிறவு முகாமை விடுதலைப் புலிகள் வெற்றி கொண்டாலும், இராணுவம் தக்கவைத்துக் கொண்டாலும் சண்டை இத்துடன் ஓயப்போவதில்லை என்றும், அடுத்த கட்டத் தாக்குதலின் தொடக்கமாகவே இது இருக்கும் என்றும் ஏஜென்சி செய்திகள் கூறியுள்ளன. (4 ஆம் பக்கம் பார்க்க)

29 படையினர் சடலமும் பலாலியில் தகனம்

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி பிறட் பருத்தித்துறையில் வைத்து சிறிலங்கா கடற்படையினரிடம் கையளித்த 29 இராணுவத்தினரின் சடலங்கள் பலாலி இராணுவ முகாமில் தகனம் செய்யப்பட்டதாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கொழும்பில் தெரிவித்தார். புலிகளால் கைப்பற்றப் (4ஆம் பக்கம் பார்க்க

- ஹமில்டன் வனசிங்கா

இயக்கச்சிப் பகுதியில் அகோரக் குண்டுவீச்சு

(இயக்கச்சி)

கடந்த இரு தினங்களாக ஆனையிறவு இயக்கச்சிப் பகுதிகளில் குண்டுவீச்சு விமானங்களின் தாக்குதல்களும், ஆட்லறித் தாக்குதல்களும் அதிகரித்துள்ளன.

நேற்று முன்தினம் இயக்கச்சிப் பிரதான வீதியில் இருந்த வீடொன்றின் மீது வை - 12 விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் வீட்டின் முன் பகுதி முறறாகத் தகர்ந்துள்ளது.

நேற்று நண்பகல் நடை (4ஆம் பக்கம் பார்க்க)

பிரிகேடியர் விஜேய விமலரெட்னா மயிரிழையில் தப்பினார்

(கொழும்பு)

ஆனையிறவுச் சண்டையில் ஜூலை 17ஆம் திகதி இரவு, வடபகுதி இராணுவப் பொறுப்பாளரும் ஆனையிறவு விசேட அதிரடிப்படைப் பொறுப்பாளருமான பிரிகேடியர் விஜேய விமலரெட்னா புலிகளின் படைப்பிரிவு வகுத்திருந்த வியூகத்தில் சிக்கிக் கொண்டார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இவருடைய கட்டுப்பாட்டு நிலையத்தையும், இவரையும் மீட்டு எடுப்பதற்கு தொடர்ந்து பின்னால் வந்த படைப்பிரிவு உதவியுள்ளது. பல மணிநேரம் நீடித்த கடும் சண்டையின்பிறகு ரவைகள், போர்முனை ஆயுதங்கள் வைத்திய சிகிச்சைப் பிரிவு ஆகியவை சகிதம் இவர் பின் வாங்க வேண்டி நேர்ந்தது. இவருடன் லெப். கேணல் பி. குலத்துங்கா, லெப். கேணல் சமரதுங்கா, மேஜர் (டாக்டர்) ஹில்மன் சில்வா ஆகியோர் அப்போது உடன் இருந்தனர். பின்னால் வந்த இராணுவம் இவரைக் கடும் சமரின் பின் மீட்ட சமயம், மேற்படி அதிகாரிகளும் இவர் பின்வாங்கிச் செல்வதற்கு உதவியுள்ளார்கள்.

பிரிட்டனைவிட்டு வெளியேற கிட்டுவிற்கு உத்தரவு

(லண்டன்)

யாழ்மாவட்ட முன்னாள் தளபதியான கிட்டுவை (சதாசிவம் கிருஷ்ணகுமார்) நாட்டைவிட்டு வெளியேறுமாறு பிரிட்டிஷ் அமைச்சின் உள்துறை அமைச்சரகம் பணித்துள்ளது.

கடந்த 18 மாதங்களாக லண்டனில் விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரங்களின் பணிமனைக்குத் தலைவராக இருந்துவரும் கிட்டு முதலில் ஆறு மாத விஸா பெற்று லண்டன் சென்றதாகவும், பின்னர் ஆறு மாதங்கள் அவரது விஸா நீடிக்கப்பட்டதாகவும் பிரிட்டிஷ் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தற்பொழுது மேலும் ஆறு மாதகால விஸா நீடிப்பதற்கு கிட்டு விண்ணப்பித்து அவரது விண்ணப்பம் பரிசீலனையில் இருக்கும்போது பிரிட்டிஷ்உள்துறைஅமைச்சகம்மேலேகூறியவாறு நாட்டை விட்டு வெளியேறுமாறு கோரியுள்ளது

அதே வேளை தான் ஏன் நாட்டை விட்டு வெளியேறக் கூடாது அல்லது வெளியேற்றப்பட கூடாது என்பதற்கான விளக்கத்தை அளிப்பதற்கென ஏழாம் திகதி வரைதிரு.கிட்டுவிற்கு உள்துறை அமைச்சரகம் அவகாசமும் அளித்துள்ளது

மேலும் திரு. கிட்டுவை நாடு கடத்த பிரிட்டிஷ் உள்துறை அமைச்சகம் முடிவு எடுத்தாலும் அவரை வேறொரு நாடு ஏற்றுக் கொள்ளவிரும்பினால்அந்நாட்டிற்கு அனுப்பப்படுவார் என்பதையும் உள்துறை அமைச்சரகம் தெரிவித்துள்ளது

இதுபற்றி திரு. கிட்டுவிடம் பி. பி. ஸி செய்தியாளர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டதற்கு தாம் சட்டத்தரணிகளிடம் தொடர்பு கொண்டிருப்பதாகவும் அதனால் இதுபற்றி எதுவும் தெரிவிக்க இயலாதிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏழு இராணுவ அதிகாரிகளும் சிங்கள வியாபாரியும் கைது

(அனுராதபுரம்)

கொழும்பில் இருந்து வந்த இராணுவப் பெலிஸ் குழு, அனுராதபுரத்தில் ஏழு இராணுவப் பொலிஸாரைக் கைது செய்துள்ளது. வடக்கிற்கு எடுத்துச் செல்லத் தடைசெய்யப்பட்ட பொருள்களான பற்றறி, மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல் ஆகியவற்றை கடத்திச் செல்ல உதவியதற்காகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் இவர்களுடன் சிங்களவரான வர்த்தகர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த வர்த்தகர் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவருமாவார்.

மேற்படி வர்த்தகர் வழங்கி (4ஆம் பக்கம் பார்க்க)

வாழ்த்தும்பரம்

தவறிவிட்டது

28-07-91 இரவு நல்லூர்க் கோயிலுக்கும் கைலாசபிள்ளையார்கோயிலுக்கும் இடையில் 1990 ஆம் ஆண்டுக்குரிய கறுப்பு நிற நாள் குறிப்பேடு (டயறி) ஒன்று முக்கிய ஆவணங்களோடு தவறிவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (R/1603)

மலிவு விற்பனை

A/L, O/L, ஆண்டு 5 புலமைப்பரிசில்) பரீட்சைகளுக்கான Tutes மலிவு விலையில் விற்பனையாகின்றன. Rod புத்தக நிலையம் 58 A. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (B/2891)

அனித்தா பயிற்சி நிலையம் மனையியல் கண்காட்சி

இம்மாதம் 9,10,11 ஆம் திகதிகளில் நடைபெறும். Cake Icing, Cookery, Hair Style. Handy Craft. Needle Work. (B/2894)

யாழ். வர்த்தகர் சங்கம்

விசேட பொதுக்கூட்டம் 03-08-1991 (இன்று) சனிக்கிழமை காலை 2-30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். பல முக்கிய விடயங்கள் பற்றி ஆலோசிக்கப்படவிருப்பதால் சகல வர்த்தகர்களும் குறித்த நேரத்திற்கு தவறாது சமுகம் கொடுக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

சி. நமசிவாயம் — பொதுச் செயலாளர்
க. வி. குலரத்தினம் — தலைவர்

(R/1597)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
முல்லைத்தீவுக் கிளை

பதவி வெற்றிடங்கள்

கீழ்க்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

அ. வைத்திய அதிகாரி
ஆ. சுகாதார போதனாசிரியர்
இ. தாதி போதனாசிரியர்

தகைமையுடையோர் 10-08-91க்கு முன் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். இதற்கான நேர்முகப் பரீட்சை 12-08-91 காலை (9-00மணிக்கு) இப் பணிமனையில் நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவோர் பெயர்ப்பட்டியல் பணிமனை விளம்பரப் பலகையில் 10-08-91இல் வெளியிடப்படும். முல்லைத்தீவில் நிரந்தரமாக வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

3, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

கௌரவ செயலாளர்
இ. செ. சங்கம்
யாழ்ப்பாணக் கிளை.

[B-2893]

45-ம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்
21 - 03 - 1971

தமிழீழ மண்ணில்
20 - 06 - 1991

2ஆம்லெப். சின்னப்பர் (ரவிக்காந்த்)
(செல்வன் கனகராசா பிரபானந்தன் (பிரபு சுன்னாகம்)

அன்னியர் ஆட்சி அகற்ற
அடிமை விலங்கு ஒடிக்க
தமிழீழ மண்ணை மீட்க
சீறும் புலியென வீரகளம் புகுந்தவனே
உனது இறுதி இலட்சியம்
நிறைவேறும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

மணலாற்றுப் பிரதேசத்தில் சிங்கள இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த இவருக்கு எமது வீர அஞ்சலிகள் 03-08-91 (இன்று) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சசிக்குமார் வீதி,
கோண்டாவில் மேற்கு,
சோண்டாவில்

- குடும்பத்தினர்.

(R/1600)

முகாமைத்துவ பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

மூன்றாம்தர அதிபர்களுக்கான முகாமைத்துவ பயிற்சி நெறி எதிர்வரும் 5ஆம் திகதி முதல் 9ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இப்பயிற்சி நெறியில் இவ்வருடம் பங்கு பற்றாதவர்களும் கடமையாற்றும் அதிபர்களும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளவர்களும் பங்குபற்றலாம் எனக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். குறிப்பிட்ட தொகையினரே பயிற்சிக்கு அனுமதிக்கப்படவுள்ளதால் தகுதியானவர்கள் தங்கள் பெயர்களை முகாமைத்துவ நிலையத்தில் பதிந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ச)

புதிய கடற்படை தளபதி

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய கடற்படைத் தளபதியாக றெயர் அட்மிரல் பெர்னான்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

கடற்படைத் தளபதி வைன் அட்மிரல் ஆனந்த சில்வா சேவையில் இருந்து இளைப்பாறுவதை அடுத்து 52 வயதான றெயர் அட்மிரல் லெப்டினன்ட் பெர்னான்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

சமுகமளிக்கவும்

(நமது நிருபர்)

சகல அரசாங்க திணைக்களங்கள் மற்றும் கூட்டுத் தாபனங்களின் தலைவர்கள், அதிகாரிகளை யாழ். செயலகத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை பத்து மணி அளவில் நடைபெறும் கூட்டத்திற்குச் சமுகமளிக்கும்படி மேலதிக அரசாங்க அதிபர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

யாழ். பல்கலைக் கழகம்

மகாபொல கொடுப்பனவு

8ஆவது தவணைப் பணம்

முதலாம் வருடம்		
மருத்துவபீடம்	05-08-91	9.00 – 12 00
கலைப்பிரிவு	07-08-91	1.30 – 3.00
வர்த்தகப்பிரிவு	12.08.91	9.00 - 12.00
வியாபார நிர்வாகப்பிரிவு		

9ஆவது தவணைப் பணம்

இரண்டாம் வருடம்		
மருத்துவ பீடம்	05.08.91	1.30 – 3.00
கலைப்பிரிவு	08.08.91	9 00 - 12.00
வர்த்தகப்பிரிவு	12.08,91	1.30 - 3.00
வியாபார நிர்வாகப் பிரிவு		
மூன்றாம் வருடம்		
மருத்துவ பீடம்	06 08.91	9.00 - 12.00
கலைப் பிரிவு	08.08.91	1.30 – 3.00
வர்த்தகப் பிரிவு	13.08.91	9 00 - 12.00
வியாபார நிர்வாகப் பிரிவு		
நான்காம் வருடம்		
மருத்துவபீடம் 4ஆம் 5ஆம் வருடங்கள்	06.08.91	1.30 - 3.00
கலைப்பிரிவு	09.08.91	9.00-12.00
வர்த்தகப்பிரிவு	13.08.91	1.30 -3.00
வியாபார நிர்வாகப் பிரிவு		
1ஆம் 2ஆம் 3ஆம் 4ஆம் வருட		
பௌதிக விஞ்ஞானப்பிரிவு	07.08.91	9.00 - 12.00
உயிரியல் விஞ்ஞானப்பிரிவு	09.08.91	1.30 - 3 00
	14.08.91	9.00 - 12.00

7ஆவது தவணைப் பணம்

விவசாயபீட மாணவர்கள்
இவர்களுக்கான கொடுப்பனவு விவசாய பீடத்தில் வைத்து வழங்கப்படும்

கொடுப்பனவின் போது சமர்பிக்கப்பட வேண்டியவை

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

பதிவாளர்

(B/2896)

நினைவு கூருகின்றோம்...

1991-08-03

நெல்சன்

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் இராணுவத்தினரால் கைது செய்யப்படு கையில் சயனைற் உட்கொண்டு வீரமரணமெய்திய

மகிந்தன் (முல்லைத்தீவு)
பரதன் (யாழ்ப்பாணம்)

1990 ஆம் ஆண்டு பாலையடி வெட்டையில் தவறுதலாக எறிகணை வெடித்ததில் எமைப்பிரிந்த

ஆனந்த் (அருச்சுனன் ஜெகநாதன் - நாகமுனை, அம்பிளாந்துறை, மட்டக்களப்பு)

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் காயமுற்று பின்னர் வீரமரணமெய்திய

பெனா (கிறிஸ்தோபர் கிளிற்றன் நிர்மலன் - இல. 01, பண்டிவிரிச்சான், மன்னார்)

பரந்தன் முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

றிஸ்வான் (சுந்தரம் - கருப்பட்டை முறிப்பு, முல்லைத்தீவு)

வல்வெட்டித்துறையில் எதிர்பாராத சம்பவத்தில் எமைப்பிரிந்த

அமிர்தா (நளினி சுந்தரம் - கல்வயல்)

பலாலி முகாமிலிருந்து சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரமரணமெய்திய

நெல்சன் (இரத்தினம் ஜெயபாலசிங்கம் – திருப்பூர், மயிலிட்டி)

முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினரின் குண்டு வீச்சு விமானங்கள் மேற்கொண்ட தாக்குதல்களில் சிலாவத்தை, அளம்பில் பகுதிகளில் கொல்லப்பட்ட 5 தமிழர்கள்.

வவுனியா பாலமோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினரின் குண்டு வீச்சு விமானங்கள் மேற்கொண்ட தாக்குதல்களில் கொல்லப்பட்ட இளம் பெண்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

– விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/ 2889)

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 03-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05

சிந்தனைக்கு

அபத்தத்தை இவ்வளவு அழகுறப் பேசுபவருக்கு தான் பேசுவது அபத்தம் என்று நன்கு தெரிந்திருக்கும்.

— ஸேம்யல் ஜான்ஸன்

"48 மணிநேரம்"

ஆனையிறவு இராணுவ முகாம் முற்றுகையை முறியடித்து முகாமில் சிக்கியுள்ள இராணுவத்தினரை மீட்பதற்கான இறுதிக்கட்டத் தாக்குதல்கள் தொடங்கிவிட்டன. மீட்புப் படையினர் எந்நேரமும் முகாமைச் சென்றடையலாம் என ஆனையிறவு களத்தில் இருந்து திரும்பிய இராணுவ அதிகாரி ஒருவர் நேற்றுமுன்தினம் காலை பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். மேலும் அவர், பதின்நான்கு வயதுச் சிறுவர்கள் களத்தில் நின்று தமது தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது ஓட்டமெடுப்பதாகவும் தெரிவித்தார்.

சிறிலங்கா இராணுவத்தினர் முகாம் அண்மையில் பலமான தாக்குதல் ஒன்றை நடத்திக்கொண்டிருப்பதும் புலிகள் எதிர்த்தாக்குதலில் ஈடுபட்டிருப்பதும், அதற்காக பெரும் எடுப்பிலான விமானக் குண்டு வீச்சை விமானப் படை மேற்கொண்டிருப்பதையும் யுத்த களத்தில் இருந்து வரும் செய்திகள் ஊர்ஜிதப்படுத்துபவையாகவே உள்ளன ஆனால் சிறிலங்கா இராணுவத் தளபதியின் கூற்றின்படி பதின்நான்கு வயதுச் சிறுவர்கள் தர்மைக் கண்டதும் ஓட்டம் எடுப்பதுதான் இவ் இராணுவ அதிகாரி ஆனையிறவு களத்தில் இருந்து திரும்பினரா அல்லது வேறு எங்கிருந்தாவது திரும்பினரா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

கடந்த மாதம் பதின்நான்காம் திகதி வெற்றிலைக்கேணி, கட்டைக் காட்டுப் பகுதியில் ஆனையிறவு மீட்புப் பணிக்காக 2000 இராணுவ வீரர்கள் கரையிறக்கப்பட்ட போது சிறிலங்கா இராணுவத்தின் மாபெரும் கரையிறக்கம், ஆனையிறவு இராணுவ முகாம் இருநாட்களில் (48 மணி நேரத்தில்) மீட்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், எதிர்பார்த்தபடி முன்னேறமுடியாது இராணுவம் பின்னடைந்தது அடிமேல் அடி வைத்து முன்னேற முற்பட்டபோதும் புலிகளின் எதிர்த் தாக்குதல்கள் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தின. இந்நிலையில், சிங்கள மக்களையும் இராணுவத்தையும் தென்பூட்டுவதற்காக 18 ஆம் திகதி அன்று ஒன்னும் 48 மணி நேரத்தில் இராணுவம் ஆனையிறவு சென்றடைந்து விடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை தொடர்ச்சியாக நடந்த ''14 வயது'' புலிகளின் தீவிர எதிர்த் தாக்குதலும், அதிரடிகளும் 2000 பேர் கொண்ட படை அணிகளைச் சிதறடித்தது முன்னேறிய முள்ளியான், புல்லாவெளி நிலைகளில் இருந்து உயிர் தப்பினால் போதும் என்று தமது சகாக்களின் சடலங்களையும் விட்டுவிட்டு ஓட வேண்டிய நிலை இராணுவத்திற்கு ஏற்பட்டது.

இந்நிலையில் கலைந்த இராணுவ அணிகளை மாற்றி புதிய படையணிகள் தரையிறக்கப்பட்டன. 2000 பேராக இருந்த படைஅணிக்குப் பதிலாக 8000 திற்கு மேற்பட்ட இராணுவத்தினரைக் கொண்ட படை அணிகள் தரையிறக்கப்பட்டன.

இப்படை அணிகள். நீண்ட ஆயத்தத்தின் பின்னர் 28 ஆம் திகதி பலத்த தாக்குதலை ஆரம்பித்தன. ஆனையிறவு மீட்பிற்கான இறுதித் தாக்குதல்; ''போர்களுக்கெல்லாம் தாய்''; 48 மணி நேரத்தில் முகாம் மீட்கப்படும்; என தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டபோது தெரிவிக்கப்பட்டது.

ஆனால், சிறிலங்கா இராணுவத்தின் திட்டத்தின்படி யுத்தம் நடைபெறவில்லை 48 மணித்தியாலங்கள் அல்ல 96 மணித்தியாலங்களையும் கடந்து நடைபெற்றுக் கொண்டுள்ளது இறுதிப் போர் என அறிவிக்கப்பட்ட போர் 72 மணித்தியாலங்களின் பின் மீண்டும் ஒரு தடவை இறுதிப் போர் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக துளபாடங்களும் இறக்கப்பட்டன. இதில் 300 உழவு இயந்திரங்களும் இடம்பெற்றன.

மேலும், சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தது போன்று இராணுவம் திட்டமிட்ட வழியில் செல்லவில்லை. விடுதலைப் புலிகளின் தீவிர தாக்குதலால் அடிக்கடி தமது திசையை மாற்றிக்கொண்டது. முன்னைய திட்டத்தைப் போன்று வாடியடிச் சந்தியையோ இயக்கச்சிச் சந்தியையோ இராணுவம் அணுக முடியவில்லை. சிறிலங்கா ஓய்வு பெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டது போன்று இராணுவம் வகுத்திருந்த திட்டத்தின்படி யுத்தம் நடைபெறவில்லை.

இவ்வாறான தடங்கல்களும், தாமதங்களும், இழப்புக்களும் சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட காரணமாயிருந்தவர்கள் ''14 வயதுடைய'' புலிகள். இராணுவத்தினரைக்கண்டு இப் ''14வயது'' பையன்கள் ஓடுவதானால் ஏன் இந்தத் தாமதம். எவ்வாறு ஏற்பட்டிருக்க முடியும். வானொலியில் தெரிவித்து வந்தது போல் கடும் எதிர்த் தாக்குதல்கள் எவ்வாறு நிகழும்? அவ்வாறாயின் 9.5 கிலோ மீற்றர் தாண்ட ஏன் இந்த இருபது நாட்கள்? இந்நிலையில்தான் இவ் இராணுவ அதிகாரி களத்தில் இருந்து சென்றாரா அல்லது கொல்லைப் புறத்தில் இருந்து சென்றாரா எனக் கேட்க வைக்கின்றது.

தம் மீதான குற்றச்சாட்டை சிவசங்கர் மறுக்கின்றார்

காவிரி ஆற்று நீர் பிரச்சினை தொடர்பாக சில பத்திரிகைகளில் இந்திரா காங்கிரஸின் மூத்த உறுப்பினரான சிவசங்கருக்கு எதிராக வெளியாகியுள்ள குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்திருக்கிறார்

இது உண்மையானது என்று நிரூபிக்கப்பட்டால் தனது ராஜ்யசபா உறுப்பினர் பதவியிலிருந்து தாம் விலகத் தயார் என்றும் அவர் சொன்னார்.

கர்நாடகஅரசு தனது தூண்டுதலின் பேரில் அவசர கூட்டத்தைப் பிறப்பித்ததாகப் பத்திரிகைகளில் வெளியான செய்திபற்றி விசாரணை மேற்கொள்ளுமாறு அவர் சபையில் கேட்டுக்கொண்டார். இந்தக் குற்றச் சாட்டுக்களை உரிமை மீறல் குழு விசாரிக்க வேண்டும் என்று அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

இருதய சத்திர சிகிச்சை நிபுணர் சுட்டுக் கொலை

உலகில் சிரேஷ்ட இருதய சத்திர சிகிச்சை நிபுணர்களில் ஒருவரான விக்டர் செவ் கடந்தமாதம் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரைச் சுட்டுக்கொன்றதாக சந்தேகிக்கப்படும் 48 வயதுடைய சிவ் செவ் லீயு மெல்போர்ன் விமானநிலையத்தில் விமானமேற முற்பட்டபோது ஞாயிறன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சத்திரசிகிச்சை நிபுணருக்கும் சந்தேகநபருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது நிபுணர் சுடப்பட்டார் எனக் கூறப்படுகின்றது. சூடுபட்டு இறந்த டாக்டர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற முதலாவது இருதய மாற்றுச் சிகிச்சையைச் செய்தவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

தாயகம் திரும்பியோரும் பதிவு செய்தாக வேண்டும்

சிறிமாவோ - சாஸ்த்திரி ஒப்பந்தத்தின் கீழே 1964ற்குப் பின் தாயகம் திரும்பியோரும் தமதுபெயரை பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யவேண்டும் என்றும்அவர்களுக்குஇந்த உத்தரவிலிருந்து விதிவிலக்கு இல்லை என்றும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எஸ். இராமலிங்கம் கூறியுள்ளார். இலங்கை அகதிகள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும் என்று பிறப்பித்த ஆணை தங்களுக்குப் பொருந்தாது என்று அறிவிக்கக் கோரி தாயகம் திரும்பிய ஆர் காளிமுத்து தாக்கல் செய்த ரீட் மனுவுக்கு அளித்த தீர்ப்பில் அவர்கள் இந்தியப் பிரஜைகளாகிவிட்ட போதிலும், தாயகம் திரும்பிய தமிழர் முன்பு இலங்கையில் வசித்தவர்கள் என்பதால் அவர்களும் இலங்கைத் தமிழர்களின் வரிசையில் அடங்குவர் என நீதிபதி குறிப்பிட்டார்.

புகையிரதத்தில் குண்டு வெடிப்பு

(மாஸ்கோ)

மாஸ்கோவில்இருந்து அஸர்பைசானின் தலைநகருக்குச் சென்று கொண்டிருந்த புகைவண்டியில் குண்டொன்று வெடித்து 16 பேர் இறந்து போனார்கள்.

இறுதிப் பெட்டிகளில் வெடி வெடித்தது. வெடிக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. ஆர்மேனியத் தீவிரவாதிகளின் வேலை இதுவென்று கருதப்படுகிறது. இதற்கு முன் இந்தப்பகுதியில்இதேபோன்று நான்கு முறை தாக்குதல்கள் நடந்துள்ளன

அடையாள அட்டை இன்றி

'மல்லிகை'யுள் பொலிஸும் செல்ல முடியாது

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை செய்து வரும் விசேட புலனாய்வுக் குழுவின் அலுவலகமான மல்லிகைக்கு அடையாள அட்டை கொண்டு வராத பொலிஸ்காரர் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இந்த அலுவலகத்தைச் சுற்றி பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. துப்பாக்கி ஏந்திய பொலிசார் காம்பவுண்ட் சுவரை சுற்றிலும் வரிசையாக நிறுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் அதிரடி தாக்குதலை சமாளிக்கும் வகையில் மணல் மூடைகளை அடுக்கி, அதன் பின்னால் நவீன ரக துப்பாக்கியுடன் மத்திய பாதுகாப்பு படையினர் தயாராக இருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அலுவலகத்தில் நுழைவோரை சோதனைசெய்வதற்காக வாசலில் ஒரு டென்ட் அமைக்கப்பட்டு அதிலும் பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் இந்த அலுவலகம் அமைந்துள்ள வீதியில் பங்களாவிற்கு எதிராக எந்த வாகனமும் நிறுத்துவதையும் பொலிஸார் அனுமதிக்கவில்லை.

அத்வானி கொலை முயற்சி?

(டில்லி)

லோக் சபை எதிர்க்கட்சித் தலைவர் எல். கே. அத்வானியைக் கொலை செய்யும் நோக்கத்துடன்பங்களதேஷில் இருந்து ஒரு குழு இந்தியாவுக்குள் நுழைந்திருக்கிறது என்று பத்திரிகைச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது பற்றித் தக்க நடவடிக்கை எடுக்குமாறு லோக் சபா சபாநாயகர் சிவராஜ் பட்டேல் அரசைக் கேட்டுள்ளார்.

மகஸீன் சிறையில் உள்ளோருக்கு உதவுக

மகஸீன் சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 300 தமிழ் பேசும் இளைஞர்களில் 30 இளைஞர்களை அவர்களது பெற்றோர் அல்லது உறவினர்கள் சென்று பார்த்து உதவ முடியாதுள்ளதால் தொண்டர் ஸ்தாபனங்கள் இவர்களுக்கு உதவ முன்வர வேண்டும் எனப் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த 30 இளைஞர்களின் பெற்றோர் வடக்கு-கிழக்கில் தற்போது வசித்து வருவதால் அவர்களால் கொழும்பு வந்து இவர்களது தேவைகள் பற்றி அறிந்து உதவ முடியாது. ஆகவே தொண்டர் ஸ்தாபனங்கள் இவர்களுக்கு உதவுமாறும் கேட்டுக்கொள்கின்றனர்.

மகோற்சவம்

(அரியாலை)

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீராஜராஜேஸ்வரி (பேய்ச்சியம்பாள்) ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று ஆரம்பமானது. எதிர்வரும் 11 ஆம் திகதி [ஞாயிற்றுக்கிழமை] தேர்த் திருவிழாவும் 12 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

வெற்றிவேண்டிப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுப் போரில் புலிகளின் வெற்றி வேண்டியும் வீரமரணமடைந்த போராளிகளின் ஆத்ம சாந்திக்கும் காயமடைந்த போராளிகளின் ஆரோக்கியம் வேண்டியும் நேற்றையதினம் (2-8 91) உரும்பராய் ஞானவைரவ சுவாமிகோயிலில்காலை10.00 மணியளவில் விசேட அபிஷேக ஆராதனைகளும்சொற்பொழிவும் இடம்பெற்றன.

180 பேர் வெள்ளத்தில் மூழ்கிமரணம்

(டில்லி)

இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் 140பேர் இறந்துள்ளார்கள். அல்லது காணாமற் போய் விட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

வர்தா ஆற்றின் கரை உடைத்து வெள்ளம் பெருக்கெடுத்து மேர்வார் கிராமமும் அயலில் உள்ள சிறுகிராமங்களும் நீரில் மூழ்கி விட்டன என்றும், குறைந்தது 500பேர் வரை நீரில் மூழ்கி இறந்து விட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கிறன இராணுவம் மீட்புர் பணிக்கு அழைக்கப்பட்டிருக்கிறது.

ஒரிஸா உட்பட வேறு சில மாநிலங்களிலும் கடும் மழையினால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

ஒரிஸாவில் 40 பேர் நீரில் மூழ்கி இறந்து போனார்கள்.

நோயாளர் சவர்க்காரம் கொண்டு வரவும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனைக்கு மகப்பேற்றுக்காக வரும் தாய்மாரிடம் சவர்க்காரம் கொண்டு வருமாறு அங்குள்ள ஊழியர்கள் பணிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தற்போது அங்கே 8 ஆம் வார்ட்டிற்கு அனுமதிக்கப்படுவோர் சவர்க்காரத்துடனேயே செல்கின்றனர். இது வரைகாலமும் மருத்துவமனைகளிலேயே தேவை கருதி சவர்க்காரங்கள் பயன்படுத்தப்பட்டன.

போட்டோ வீடியோவுக்கு தடை நீக்கம்

(கொழும்பு)

சிறிலங்காவில் இருந்து போர் நடவடிக்கை தொடர்பான புகைப்படம் மற்றும் வீடியோப் படங்களை வெளி நாடுகளுக்கு அனுப்பத் தடை விதிக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் முதல் இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது என சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

ஹேரத் திரும்பினார்

(கொழும்பு)

சிறிலங்கா வெளிநாட்டு அமைச்சர் ஹரோல்ட்ஹேரத் இந்திய அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு நேற்று முன்தினம் சிறிலங்காதிரும்பியுள்ளார்.

வாலாற்றுப் பெரும் போர்களுடன் ஒப்பிடக்கூடிய பெரும் போர் - யோகி

(யாழ்ப்பாணம்)

சங்கிலியன், பண்டாரவன்னியன் காலத்தில் நடந்த பெரும் போர்களுடன் ஒப்பிடக்கூடிய போர க ஆனையிறவில் தற்போது நடைபெற்று வரும் போர் அமைந்துள்ளதாக எமது தலைவர் குறிப்பிட்டுள்ளார். இப்போரில் ஆனையிறவு முகாம் அழிக்கப்படுமாயின் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஒரேயொரு அந்நிய ஆக்கிரமிப்பு படை முகாமும் இல்லாது போவதோடு இப்பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சியும் அதிகரிக்கும்.

இவ்வாறு நேற்றுக்காலை யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலதிபர் திரு யோகரத்தினம் யோகி தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்கள் பெருந் தொகையாகக் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் திரு யோகி அவர்கள் மேலும் பேசுகையில்,

யுத்தகளத்தில் எமது போராளிகள் எல்லைகளைநோக்கி முன்னேறும்போது எமது தளபதிகள் ஏனைய இராணுவங்களைப்போல் போராளிகளுக்குப் பின்னால் நின்று அவர்களுக்கு உத்தரவிடுவதில்லை. மாறாக அவர்களுக்கு முன்னே நின்று கம்பின்னே வருமாறே உத்தரவிடுகிறார்கள், இன்காரணமாகவே எமது தளபதிகள் பலர் வீரமரணமடையவும், காயமடையவும் நேரிடுகிறது என்றார். தொடர்ந்து பேசிய திரு யோகி,

எட்டு இலட்சம் மக்களைக் கொண்ட யாழ். குடா நாட்டில் ஒரு இலட்சம் பேராவது ஆயுதமேந்திப் போராட வேண்டும். குறிப்பாக மாணவர்கள் முன்வரவேண்டும் பல சிறப்புப் படையணிகள் உருவாக்கப்படவேண்டும் இதன் மூலமே நாம் தமிழீழத்தை வென்றெடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் மாணவர்களின் போராட்டம் சம்பந்தமான பல வினாக்களுக்கு திரு. யோகி அவர்கள் பதிலளித்தார்.

இதில் யாழ், இந்துக் கல்லூரி அதிபர் திரு. பஞ்சலிங்கம், மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி ஜெயா, மாணவரமைப்பைச் சேர்ந்த திரு. அரவிந்தன், மாணவர் பிரதிநிதிகள் ஆகியோரும் உரையாற்றினார்கள். (மு)

இனப்பிரச்சினைத் தீர்வு அரசாங்கம்அக்கறை இல்லை - சிறிமாவோ

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் உண்மையாகச் செயற்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவருமான சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை பிரேமதாசா அரசாங்கத்தால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்று நவசமாஜ கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

வடமராட்சியில் மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி

நேற்று முன் தினம் காலை கட்டைக்காட்டில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த மேஜர் கணேசன் (வைத்திலிங்கம் துரைவடிவேல், தொண்டமானாறு), கணன் (நாகமுத்து கலியுகவரதன், உடுத்துறை, தாளையடி) ஆகிய வீரவேங்கைகளின் புகழுடல்கள் நேற்று இடைக்காடு மகாவித்தியாலயம், தொண்டமானாறு வீரகத்தி மகாவித்தியாலயம், வல்வெட்டித்துறைச் சந்தி, பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம், நெல்லியடி மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

அஞ்சலி உரைகளையடுத்து வீரவேங்கைகளின் புகழுடல்கள் நவிண்டிலில் உள்ள மாவீரர் மயானத்தில் சங்கமமாகின. (82)

29 படையினர்

பட்ட 29 சிறிலங்கா இராணுவத்தினரின் சடலங்கள் கோண்டாவிலில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ராஜன் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி பிறட்டிடம் கையளித்தது தெரிந்ததே.

ஈமச் சடங்குகளைச் செய்வதற்காகப் பிக்குகள் அனுராதபுரத்திலிருந்து பலாலிக்குக் கொண்டுவரப்பட்டதாகவும், இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன முள்ளியான் சண்டையின் போது காணாமற் போனதாக அறிவிக்கப்பட்ட 29 இராணுவத்தினரின் சடலங்கள் இவை என்றும் சடலங்கள் சிதைவுற்று அழுகிய நிலையில் இருந்ததால் கொழும்புக்குக் கொண்டுவர முடியவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மருந்துத்தட்டுப்பாடு

அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் நேற்று விளக்குகையல் கடந்த காலங்களில் மூன்று மாதத்துக்கொருமுறை யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச வைத்தியசாலைகளுக்கு மருந்துப் பொருள்களை வழங்கி வந்தோம். ஆனால் இப்பொழுது ஒவ்வொரு மருத்துவமனைகளுக்கும் அவ்வப்போது அவசரமாக தேவைப்படும் மருந்து வகைகளையே வழங்கிவருகிறோம் ஆகவே அண்மையில் எமக்கு கிடைத்த ஒரு லொறி மருந்துப்பொருள்களும் யானைப்பசிக்கு சோளப் பொரி போன்றதொன்றாகும் என்றார்.

இவ்வாறு நேற்றுக்காலை யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலதிபர் திரு யோகரத்தினம் யோகி தெரிவித்தார்.

விமானம்

கொல்லப்பட்டதாக நேற்று மாலைகொழும்பில் இராணுவ வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவு நோக்கி இராணுவம் புதிய வீதியை அமைத்து வருவதாகவும், இதன்மூலம் தமக்குத் தேவையான ஆயுதம் மற்றும் பொருள்களை எடுத்துச்செல்கிறது என்றும் எந்நேரத்திலும் இராணுவம் புலிகள் மீதான இறுதித் தாக்குதலைத் தொடுக்கக்கூடும் என்றும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன,

படையினரின்

கையில் தெரிவித்தார்.

மேலும் அவர்கள்சிலசமயங்களில் தவறுதலாக இரண்டு தரம் எண்ணிக்கணக்கெடுத்தும் விடுகிறார்கள் என்றார் அவர் புலிகள் தமது தரப்பில் 300 பேர் இறந்துள்ளதாகத் தரிவித்துள்ளார்கள். அவர்கள் சொல்லும் தொகையை எம்மிடம் இருக்கும் தரவுகளுடன் ஒப்பிடுப் பார்க்கும் போது கிட்டத்தட்டச் சரியாக இருக்கலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இயக்கச்சி

பெற்ற தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரு மாட்டின் சடலம் வீதியோரமாகக் காணப்படுகிறது அத்துடன் இன்னொரு வீட்டின் மீது குண்டு வீச்சு விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று தென்னை மரங்கள் இடையில் முறிந்துள்ளன. மற்றும் பல மரங்கள் சேதமாகியுள்ளன இவற்றின் இளநீர், தேங்காய்கள் குவியலாகக் காணப்படுகின்றன. இதேபோலப் பல பகுதிகளிலும் தாக்குதல்களினா சேதமடைந்த மரங்களைக் காணக்கூடியதாகவுள்ளது.

ஏழு இராணுவம்

யதாகச் சொல்லப்படும் காசோலைகள் அனுராதபுர இராணுவப் பொலிஸ் பிரிகேடியர் ஒருவரிடமிருந்து இராணுவப் பொலிஸார் மீட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இராணுவத்தினரில் ஒரு கப்டன், இரண்டுலெப்டினன்கள். இரண்டு சார்ஜன்டுகளும் மற்றும் ஒரு கோப்பரலும் உள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்த்தகரிடம் எடுபஸ்கள் உள்ளன என்றும், அவை வவுனியாவுக்கும் அனுராதபுரத்துக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டுள்ள என்றும் தெரியவருகின்றது. கைது செய்யப்பட்ட வியாபாரி அனுராதபுர நகர வீதி வழியாக ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டார்.

கைதான இராணுவப் பொலிஸார் பொதிகளைச் சோதனை செய்து வடக்கிற்கு அனுமதிக்கும் பிரிவைச் சேர்ந்தவர்களாகும். (58)

ஆனையிறவில்

யில் மோதல்கள் தணிந்து காணப்பட்டபோதிலும், சிறிலங்கா விமானப் படைகள் விமானத் தாக்குதல்களைத் தொடர்ந்தும்பரவலாகநடாத்தியதாகத் தெரியவருகின்றது.

ஆனையிறவு

ஆனையிறவுச் சண்டையில் புலிகளை வெற்றி கொண்டு ஒரு பலமான நிலையில் இருந்து புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்ல திட்டமிட்டுள்ளது என்றும், அரசு கூட்டியிருக்கும் அனைத்துக் கட்சிக் கூட்டம் இனப் பிரச்சினைக்கு தீர்வு தரபோவதில்லையென்றே பலரும் கருதுவதாகவும் இச்செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

அதேவேளை என்னதான் இராணுவம் போராடினாலும் இராணுவச் செலவினத்தை குறைக்கவும், பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்கவும் அரசு சமாதானப் பேச்சுவர்த்தை மூலமே இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முன்வந்தேயாக வேண்டும் அதை விட்டால் அரசுக்கு வேறு வழியே இல்லை என்றும் ஒரு விமர்சகர் குறிப்பிட்டுள்ளார்.

சுயாட்சிகோரும் குடியரசுகளை

கொர்பி திட்டத்தை ஏற்க ஜோர்ஜ்புஷ் வற்புறுத்து

(மொஸ்கோ)

சின்னாபின்னப்பட்டிருக்கும் தேசத்தை ஒரு கட்டுக் கோப்பிற்குள் வைத்திருக்க ஜனாதிபதி மிக்கெயில் கொர்ப்பசேவ் தயாரித்துள்ள திட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு சர்ச்சைக்குரிய குடியரசுகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் மேலும் உரையாற்றுகையில்

ஐக்கிய சோவியத் யூனியனாக இருப்பதன் மூலம் அந்த குடியரசுகள் கூடுதலான சுயாட்சியையும், சுதந்திரத்தையும் பெறலாம் என்றும், அது பிரிவினைவாதப் போக்கிலும் பார்க்க சிறந்தது என்றும் குறிப்பிட்டார்

உக்ரேனிய மக்களுக்கு நன்றி தெரிவித்துப்பேசிய அமெரிக்க ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில் ஜனாதிபதி கொர்பசேவின் கொள்கைகளும், ஜனநாயகமயப்படுத்தும்முயற்சிகளும் சுதந்திரத்தின் இலக்குகளை எய்துவதில் வெற்றி அளித்துள்ளன என்றும், இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட தற்கொலைக்கு ஒப்பானதுமான தேசியவாதக் கொள்கைகளுக்கு அமெரிக்கா ஒரு போதும் ஆதரவு அளிக்க மாட்டாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறையில் பலியானவர் பிரதம இன்ஸ்பெக்டராவார்

(அம்பாறை)

அம்பாறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கிப் பலியானவர் விசேட அதிரடிப்படை பிரதம இன்ஸ்பெக்டரான பி. எல். அனுர அசோகா (வயது 31) எனத் தெரிய வந்துள்ளது. இவர் மரணமடைவதற்குமூன்று வாரங்களுக்கு முன்னர் தான் திருமணப்பதிவு நடைபெற்றதாகவும் திருமணம் நவம்பர் 21ஆம் திகதி நடைபெறவிருந்ததாகவும் தெரிய வருகிறது.

இவர் 19 3 ஆம் ஆண்டு முதல் கிழக்கில் சேவையாற்றி வந்தவர். பல படுகொலைச் சம்பவங்களுக்குப் பொறுப்பாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகளின்

கள் என்பன களஞ்சியப்படுத்தப்பட்டன. உப்புநீரை நன்நீராக்கும் இயந்திரம் ஒன்றும், தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரமும் ஆனையிறவு முகாமிற்குள் பொருத்தப்பட்டன. மேலதிகமாக ஜெனரேட்டர்களும், ஒரு ஆர். எம். பி. (வைத்தியர்) தலைமையில் சிகிச்சை நிலையமும் வழங்கப்பட்டது இத்துடன் மேலதிகமாகக் கலன்களில் அடைக்கப்பட்ட உணவு வகைகளும், ஊட்டச்சத்து வில்லைகளும் ஆனையிறவுக்கு வழங்கப்பட்டன.

கட்டளை பிறப்பிப்பதற்கு இரண்டு இராணுவ கட்டுப்பாட்டு நிலையங்களும் ஸ்தாபிக்கப்பட்டன. ஆனையிறவு முகாமில் 6-வது சிங்களப் படைப்பிரிவு தான் முகாமிட்டிருந்தது.

ஆனையிறவுமீட்புவிசேட அதிரடிப்படையின்அமைப்பு பின் வருமாறு இருந்தது:

வட பகுதியில் இராணுவப் பொறுப்பதிகாரியானபிரிகேடியர் விஜேய விமலரெட்னா விசேட அதிரடிப் படைக்குத் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டார் இவரின் கீழ் பின்வருவோர் பொறுப்பதிகாரிகளாகநியமிக்கப்பட்டனர்

★ பிறிகேட்- கேணல் சரத் பொன்சேகா இவருடன் அடுத்த படியில் மேஜர் பராக்கிரம பனிப்பிட்டியா (சிங்கா படைப்பிரிவு) லெப். கேணல் லோறன்ஸ் பர்னான்டோ (கஜபாகு படைப்பிரிவு) நியமிக்கப்பட்டனர்.

★ பிரிக்கேட்- கேணல் அஸ்ர விஜேந்திரா அடுத்த படியில் லெப். கேணல் காமினி ஜெயசுந்தரா (மென்ரகம் பீரங்கிப் பிரிவு) லெப். கேணல் சீவாலி வனிகசேகரா (கஜபா படைப்பிரிவு) நியமிக்கப்பட்டார்.

★ பிரிகேட்- கேணல் தெவிந்தா கலுப்பானா அடுத்த படியில் லெப்: கேணல் டி. இரத்தினசபாபதி (மென்ரக பீரங்கிப் பிரிவு), லெப் கேணல் பி. குலத்துங்க (கெமுனு வாச் பிரிவு), மேஜர் றோசன் சில்வா (கஜபாகு படைப் பிரிவு) நியமிக்கப்பட்டார்.

ஆனையிறவுப் பகுதியில் விசேட அதிரடிப் பிரிவின் நிருவாக வேலைகளுக்கு பொறுப் திகாரியான லெப் கேணல் பிரியந்தா சமரசிங்கியும், லெப். கேணல் பபில் பெரேரவும்நியமிகப்பட்டனர்

விசேட அதிரடிப் படையின் சகல நடவடிக்கைகளுக்கும் மேலான பொறுப்பு மேஜர் ஜெரல் டென்சில் கொப்பக்கடுவவுக்கு வழங்கப்பட்டது.

இவ்வாறு வசதிகள் செய்யப்பட்டிருந்தும் மூன்று வாரங்களாகமுற்றுகையை முறியடிக்க முடியாமல் இருப்பது இராணுவ வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாம்.

மரண அறிவித்தல்

தர்மரட்ணம் தர்மக்குமார் (இத்தாலி)

தர்மரட்ணம் தர்மக்குமார் கடந்த (26-7-91 வெள்ளிக் கிழமை இத்தாலியில் காலமாகிவிட்டார்.

இவர், காலஞ்சென்ற சுவாமிநாதன் தர்மரட்ணம், திருமதி தர்மரட்ணம் ஆகியோரின் அன்புப் புதல்வனும், உதயக்குமார் [கனடா], சிவக்குமார் [U.K], மீரா, ராஜ்குமார் [கனடா], கலா, தேவக்குமார், லதா, தயா, செல்வக்குமார் [யாழ் சம்பத்தரிசியார் கல்லூரி], யோகுக்குமார் [யாழ் மத்திய கல்லூரி] ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரதனி [கனடா], சுரேந்திரன் [நோர்வே] ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சின்னத்துரை விதானையார் [புங்குடுதீவு], சுவாமிநாதன் [நெடுந்தீவு] ஆகியோரின் பேரனும், சண்முகராஜாவின் [. A. இன்ஜினியரிங்] மருமகனும் ஆவார்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வக்குமார்.

8B, புதுவீதி,
அத்தியடி.
யாழ்ப்பாணம்.

[R- 1605]

அச்சுப்பதிப்பாளர் யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பண்மனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.